# ஆத்மஜோதி



போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூரைய னன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ. (தாயுமானர்)



ஓம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்.

சோதி 6 | ஜயஹு ஆனிமீ 1-ந் திகதி | சுடர் 8

## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | திருவாசகச் சிறப்பு | 197 |
| 2 | திருவாசகப் பேறு | 198 |
| 3 | மதியேறிய முடிமீதினில்......... | 199 |
| 4 | ஸ்ரீ மாணிக்கவாசக......... | 203 |
| 5 | மங்கையர்க்கரசியார் | 204 |
| 6 | ஸ்ரீகேதார்-பத்திரியாத்திரை | 207 |
| 7 | தெய்வ பக்தியும் நேர்மையுமே......... | 210 |
| 8 | ஏழையின் துணிவு | 212 |
| 9 | ஆலய வழிபாட்டின் பயன் | 213 |
| 10 | நபிநாயகம் அவர்களின்........... | 214 |
| 11 | உருவவழிபாடு | 217 |
| 12 | ஆசைப்பேய் | 218 |
| 13 | நாம் யார்? எம்கடமை என்ன? | 220 |
| 14 | வணக்கமும் வன்மையும் | 221 |
| 15 | தேவிவணக்கம் | 223 |
| 16 | செய்தித்திரட்டு | 224 |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தாரூ. 3.
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்:– நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலயம், நாவலப்பிட்டி [சிலோன்]


உ

## திருவாசகச்சிறப்பு.

தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யான்ஊறு படாதவகை இருபோதும் இறைஞ்சுவனே

கற்பாந்த காலங் -கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச்சேர்ந்ததே - அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ் மாலைத்
திருவா சகமென்னுந் தேன்.

அருள்வாத வூரர்சொல் அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தாற் - கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

திருவா சகமென்னும் தேன்பருகித் தேசமெல்லாம்
கருவே ரறுத்தருளிக் கருங்கடலை வேர்துளைத்திட்
டுருவா சகமென்னும் உண்மையுணர்ந் துத்தமனூர்
திருவா சகமென்னும் தேனினருட் காரணமே.

கருவே ரறுப்பவ ரம்பலவாணர் கழலிணையை
மருவாகக் கொண்டவர் மாணிக்கவாசகர் வாழ்த்தியநற்
றிருவா சகந்தனை ஓதாத நாவும் செவியுறக்கேட்
டுருகாத நெஞ்சமும் ஏன்படைத் தாரிவ்வுலகவரே

பேசுபுகழ் வாதவூர்ப்பிறந்து பெருந்துறைக்கடலுண்டு
ஆசிலெழிறடித் தயர வஞ்செழுத்தாலயர்ந் தெழுந்து
தேசமலிதரப் பொதுவார் சிவபோக மிகவிளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழி மாமுகில் போற்றி.



## திருவாசகப் பேறு

தொல்லை இரும் பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

என்னும் இவ்வெண்பாவினால், திருவாசகத்தேன் பிறவி நோயை நீக்கி ஆனந்தத்தை ஆக்கியது என, அதனால் வரக்கடவதாகியபேறு கூறப்படுகின்றது.

**பொழிப்புரை** - வரம்பு பெறாத வழியைத்தரும் திருவாதவூரில் அவதரித்தருளிய எம் தலைவராகும் திருவாதவூரடிகள் திருவாய்மலரில் தோன்றிய, திருவாசகம் என்று சொல்லப்படும் தேனாகிய மருந்தானது தொன்று தொட்டு வரும் பெரும் பிறவியாகிய உயிரைச் சூழுங்கட்டினை வலியறப் போக்கி, துன்பத்திற்குக் காரணமாகிய அறியாமையை அறுத்து, அறிவுடைமையைத் தந்து, இன்பத்தை உளதாக்கியது என்றவாறு.

**விளக்கவுரை**:- எல்லை மருவா நெறியாவது, பிறப்பு இறப்பு என்னும் வரம்புகளைப்பெறாதவழி. அது வீட்டினைக்காட்டும் வழியென்க அந்நெறியையே 'அன்பின் ஐந்திணை நெறி' என யாம் கோடும். எல்லைமருவிய நெறியாவது, பிறப்பு இறப்பு என்னும் வரம்புகளுக்குட்பட்ட வழி. அஃது உலகிலே மீண்டும் மீண்டும் வந்துபோகுமாறு காட்டும் வழி. எல்லை மருவா நெறியடைந்தார், இடரின் நீங்கி நல்லறிவுபெற்று இன்புறுவர். எல்லை மருவிய நெறியடைந்தார், தாம்எய்தும் இடர் களைந்து இன்பம் பெற்றுக்கொள்ளும் அறிவாற்றல்பெறுராய்த் துன்புறுவரென்க.

மருவா நெறியளிக்கும் வாதவூரன்: அவன் எங்கோனென்க. மருவாநெறியளித்தலை வாதவூரர்க்குஅடையாக்கின், அது முதற்கண் வாதவூரைச்சிறப்பிக்கும்முகத்தால், அவ்வூர்ப்பிறந்தார் அனைவரையும் பொதுப்படச்சிறப்பிக்கும். அங்ஙனம் சிறப்புற்றோருள் திருவாதவூரடிகளும் ஒருவராக, ஆக்கியோன் பெருமைக்குத்தனிப்பட்டதொரு சிறப்பின்றி இழுக்குண்டாமாதலின், அதனை அடிகளுக்கே அடையாக்குக. இங்ஙனமாக்கின், அடிகளுக்கமைந்ததனிச்சிறப்பானது, அவர் அவதரித்தருளிய ஊருக்கும் ஆங்குத்தோன்றினார்களுக்கும், அவர் காரணமாகப் புத்தம் புதிய பெருஞ்சிறப்பு உண்டாக்குமென்க. இதுகொண்டு அவ்வடையைத் திருவாசகத்தேனுக்கு அடையாக்குதலையுந்தவிர்க.

*(பண்டிதமணி. திரு. க. சு. ந. பாரதியார் அவர்களின் திருவாசகம் ஆராய்ச்சிப்பேருரையிலிருந்து சுருக்கி எடுக்கப்பட்ட ஒரு பக்கம்)*

—



## மதியேறிய முடிமீதினில், மண்ணேறிய காட்சி.

[ஆசிரியர்]

'ஆவணி மூல நாளிலே குதிரைகள் வரும்' என்று வாக்களித்திருந்தபடியே குதிரைகள் கொண்டுவரப்பட்டன. பாண்டியனும் அவற்றை ஏற்றுக் கொண்டனன். திருவாதவூரரும் சிறையிலிருந்து வெளிவந்தார். ஆனால், வந்த பரிகள் பழையபடி நரியாகி இருந்த பரிகளைக் கொன்றுவிட்டு நடு இரவில் ஊரின் நாலாபக்கங்களிலும் கூட்டங்கூட்டமாகச் சென்று ஊளையிட்டன. 'மணி நகரெங்கும் நரியிரைசையாய்க் கிடந்தது, விழித்தது நகரம்.'

இந்த அல்லோல கல்லோலப்பட்ட நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட மன்னன் அளவற்ற சீற்றங் கொண்டான். வாதவூரரை மீண்டும் கொடும் தண்டனைக் குள்ளாக்கினான். 'கதிர் நோக்கிக் கனன் மூட்டும் கடும் பகலுச்சியில் இரவிக் கடவுளை நின்று எதிர் நோக்க நிலைநிறுத்திக் கரங்களிலும் நுதலிலுங் கல்லேற்றினர்' தண்டலாளர். அடிகளால் அதனைச் சகிக்க முடியவில்லை. நரிகளைப் பரிகளாக்கிய சித்தரை நினைந்தார். "தில்லையோர் பரவநின்ற தெய்வமே யாது செய்வேன். என் மீது நின் கருணையில்லையோ? தமியேன் இன்னல் அறிந்தையோ? அறிந்திலாயோ? என்று ஓலமிட்டு அலறினார். தமது அடியனின் மகிமையை மன்னனும் ஏனையோரும் அறிய வேண்டுமெனத் திருவுளங் கொண்ட பரமபதி கங்கை நதியை வையையூடு சென்று பெருக்கெடுத்தோடுமாறு கட்டளையிட்டனர்.

அமைதியாகவும் அடக்கமாகவும் தவழ்ந்து கொண்டிருந்த வையை ஊழி வெள்ளத்தின் உருவெடுத்து ஊரை உருட்டி விழுங்கத் தொடங்கியது. வீடுகள் வீதிகள், சோலைகள் வயல்கள், மாடுகள் கன்றுகள் எல்லாம் வையையின் சீற்றத்திற்கு இரையாயின; மக்கள் பீதியுறனர்; மன்னன் கவலையுற்றனன்; அணைபோட்டு ஆற்றின் வெள்ளத்தைத் தடுக்குமாறு குடிசனங்கள் கட்டளை பெற்றனர். அவரவர்க்குரிய இடம் அளந்து கொடுக்கப்பட்டது. கரை போடும் வேலை மும்முரமாய் நடந்தது. ஒரு சிறு இடத்தில் மாத்திரம் வையை வெள்ளம் முன்போல் ஓடிக்கொண்டிருந்தது.

அந்தப்பாகத்தை அடைக்கும் பொறுப்பு வந்தியென்னும் ஓர் பரம பக்தை மீது சுமத்தப்பட்டிருந்தது. அவளோ வளைந்த மெய்யுடைய நரை மூதாட்டியான படியால், மண்வெட்டிச் சுமக்கக் கூடிய உடல் வலிமையற்றவள்; பிட்டுவிற்று வயிறு வளர்க்கும் ஏழையானபடியால் கூலிக்கு ஆள் பிடித்துத் தன்கடமையைச் செய்யவும் கதியற்றவள். அந்தப்பாட்டியின் பரிதாப நிலையை அவளுக்குப் பரஞ்சோதி முனிவர் அளித்துள்ள தராதலப்பத்திரத்தைக் கொண்டு சிறிது பார்ப்போம்:

*"துணையின்றி மக்களின்றித் தமரின்றிச் சுற்றமாகும்*
*பணையின்றி யேன்று கொள்வார் பிறரின்றிப் பற்றுக்*
*[கோடாம்*
*புணையின்றித் துன்பத் தாழ்ந்து புலம்புறு பாவி"*

என்கிறார் அவர். திருவாலவாய்த் தெய்வத்தினிடம் முறையிடுவதை விட வேறு ஒருவழியும் அக்கிழவிக்குத் தோன்றவில்லை.

தேவரும் காண்டற்கரிய தேவதேவன், மூவரும் அறிய முடியாத முதல்வன், யாவருங்காண அழுக்கடைந்த பழந்துணியை அரையிற் கட்டி, தோளின் மீது மண்வெட்டி தாங்கி, தலைமீது கூடையுடன் கூலியாளாகக் காட்சியளித்தனன் பாட்டியின் துயரந் தீர்க்கும்பொருட்டு. கிழவிமகிழ்ச்சியடைந்தாள். கூலியாகக்கேட்ட பிட்டை வந்த ஆசாமியின் பசிதீர்க்க முன்னரேயே கொடுத்தற்கும் உடன் பட்டனள். வாணிச்சி பிட்டுக்கு நஷ்டம் வந்ததேயல்லாமல், அணை கட்டு வேலை நடக்கவேயில்லை. அப்படி நடந்திருப்பின் அவர் வந்த வேலை முற்றிலும் முடிந்திராதல்லவோ? பாண்டியன் திருவாதவூரரைக் குருவாகக் கொண்டு உய்ய வேண்டிய சந்தர்ப்பமும் இத்திருவிளையாடல் தொடர்பில் வந்தே தீரவேண்டுமல்லவோ?

வேடிக்கை காட்டிப் பிறர் வேலைக்கும் பங்கஞ் செய்த விசித்திரக் கூலியாளின் போக்கை காவலாளர் கவனித்தனர்; தண்டனை கொடுக்கவும் எண்ணினர். அழுக்கடைந்த உடைக்குள் மறைந்திருந்த அழகின் பிரகாசங்கண்டு, அதனைத் தீண்டுவதற்கு அஞ்சி, அரசனிடமே புகார் செய்தனர். பாண்டியன் வைகைக்கு வந்தான்; முறைப்பாட்டின் உண்மையை நேரிற்கண்டான். பளிச்சென்றுஒரு பிரப்பம் பழம் கொடுத்தான் கூலியாள் முதுகின்மேல், கையில் இருந்த மண் கூடையை உடைப்பில் போட்டு ஆள் மாயமாய்



மறைந்துவிட, கரை உயர்ந்தது, வெள்ளம் தடைபட்டது. தான் கொடுத்த பிரம்படி உடனே தன் முதுகிலும் பட்டதை உணர்ந்த பாண்டியனின் ஞானக்கண் திறபட்டது. உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும் ஒளித்து நிற்கும் கள்வன்தானே யென்பதையும், சகல உயிர்களையும் தனக்கு உடலாய்க்கொண்டுள்ள உண்மையையும் விளக்குதற்கு எம்பெருமான் செய்த அற்புதத் திருவிளையாடல் இது என அறிந்தனன் அரசன்.

அண்ணலார் திருமேனியில் அடிபட்டபோது, எல்லாவுலகங்களிலும் இருந்தவர்கள் தங்கள் உடம்புகளிலும் அந்த அடிபட்டதெனக்கூறினர். கடவுண் மாமுனிவர் அருளிய பாடல் இதனை நமக்குவிபரமாக விளக்குகின்றது. அதுவருமாறு;

'நார்மேனின் றிலங்குபுய வழுதிமேலுந்
தன்மனை மங்கையர்மேலு மமைச்சர்மேலும்,
ஆர்மேலுஞ் சென்றுபொருஞ் சேனைமேலு
மயன்மேலு மரிமேலு மறவோர்மேலுந்.
தேர்மேல்வெம் பகன்மேலு மதியின்மேலுஞ்
சிறந்துள விந்திரன்மேலுந் தேவர்மேலும்
பார்மேலுங் கடன்மேலு மரங்கண்மேலும்
பட்டதரன் மெய்யிலடி பட்டபோதில்"

இதன் மேல் நடந்தது யாவரும் நன்கறிந்த விஜயம், திருவாதவூரர் மணிவாசகராகித் திருவாசகமென்னும் தேனை, தமிழகத்திற்கோர் ஒப்பற்ற தவநூலை, அருளி தமிழ்நாடெங்கும் பக்தி வெள்ளம் வைகைப் பெருக்கைப்போல் பரந்தோடச் செய்தனர். அரிமர்த்தன பாண்டியனும் அவர் பாதங்களில் சரண்புகுந்து பிறவியெடுத்ததின் நற்பயனையடைந்தனன்,

பக்தி உணர்ச்சியின்றிப் படிக்கும் 'பகுத்தறிவுக்' கட்சியினர்க்கு இது ஓர் கற்பனைக் கதையாகவோ, புராணப் புளுகாகவோ தோன்றலாம். ஆனால், அவர்களே, ஏன்? நாத்தழும்பேற நாத்திகம் பேசும் பொது உடமைத் தோழர்கள் தாமும், இறைவன் மண்சுமந்து பிரம்படிபட்டுதமது திருமேனியில் புண்சுமந்தஅற்புதலீலையில்

அடங்கிய அரிய நுட்பமான கருத்தை ஆழ்ந்து சிந்திப்பார்களானால், தாங்கள் எடுத்தாலும் சமதர்மம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கொள்கைகள் ஆன்மநேய ஒருமைப்பாடாக மிளிர்வதைக் காண்பார்கள்.

'உன்னை நேசிப்பதுபோல் உன் அயலானையும் நேசி' யென்பது ஏசுநாதர் மணிவாக்கு 'உன்னுள் உறையும் இறைவனே, உன் அயலானிலும், சகல உயிர்களிலும் உள்ளான். ஆகையால், அவர்களை நேசிப்பதால் நீ உன்னையே நேசிக்கிறாய்; அவர்களுக்குத் தீங்குசெய்வதால், நீ உனக்கே தீங்கைத்தேடுகிறாய்.' இதுவே மேலே விளக்கப்பட்ட திருவிளையாடலின் உண்மையான தத்துவம். அத்தோடு எம்மிறைவன் இனியார்க்கினியன், அன்பர்க்கெளியன், அடியார்க்கடியான் தொண்டர் தம் தொண்டன் என்ற உண்மையுந் தரப்பட்டுள்ளது.

பகவத் கீதை பதினோராம் அத்தியாயம் பதினோராவது சுலோகத்திலிருந்து இருபத்து மூன்றாவது சுலோகம் வரைக்குமுள்ள பாகம் விளக்குவதும் இக்கருத்தையேயாம். இந்த மாபெரும் உண்மையை அஞ்ஞானிகளும் அறிந்து தமது திருவடிகளை வழுத்தவேண்டும் என்பதற்காகவே, தில்லைநாதர் திருமுடி மேல் மண் சுமந்தனர் போலும் என்கிறது திருவாதவூரடிகள் புராணம். அந்தப்பாடலையுந்தந்து இக்கட்டுரையை முடிக்கின்றோம்;—

*"மாயையெனுங் கரும்பெரிய புனன்மேன் மொக்குள்*
*வண்ணமெனு மெண்ணிலா வண்டத்துள்ளும்*
*ஏயவகை யெண்பத்து நான்குநூறா யிரமான*
*பலயோனி யெவற்றி னுள்ளும்,*
*ஆயவுயிர்க் குயிராகி நிற்குந் தன்மை*
*யவனிதலத் தஞ்ஞானரறிந்து பாதச்*
*சேயமலர் வழுத்துதற்கோ கூலியாளாய்ச்*
*சென்று முடிமண் சுமந்தார் தில்லைநாதர்!"*

மணிவாசகர் திருநட்சத்திரம் ஆனி மகம் 4–7–54 ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அவர் காலத்தைப் பற்றிய சில ஆராய்ச்சி உண்மைகளை பண்டிதமணி க சு. நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள் விளக்கியுள்ளார். அவரது குறிப்பை அடுத்த பக்கத்தில் காண்க.

---



# ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

## காலம் பற்றிய குறிப்பு.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாற்றினைத்தமிழ் நாட்டில் யாவரும் அறிவர். அடிகளது காலத்தைப் பற்றிப் பல பேரறிஞர்கள் பல்வகைப்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்து ஒருவர்க்கொருவர் முரண்பாடுடையோராய் இன்ன காலம் எனத் துணிதற்கியலாத வராயுள்ளனர்.

திருஞான சம்பந்த சுவாமிகளும், அப்பர் சுவாமிகளும் வாழ்ந்து வந்தகாலத்தில் சமண சமயமே மிகப் பல்கியிருந்தது என்பது வெளிப்படை. சமண சமயத்திலும் காலத்தால் முந்தியது பௌத்த சமயம். சம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் பதிகங்கள் தோறும் சமண சமயத்தை இழித்துக் கூறியுள்ளனர். மாணிக்கவாசக சுவாமிகள் சமணசமயத்தை அறவே குறியாது புத்தனைப்பற்றியே குறித்துள்ளார். ஆதலின் அடிகள் காலத்தில் பௌத்தசமயமே பரவியிருந்தது. எனவே, தேவாரம் பாடிய இருவர் காலத்திலும் மாணிக்கவாசக சுவாமிகள் காலம் முற்பட்டது எனக் கொள்ளற்கிடமுண்டு.

ஞானசம்பந்த சுவாமிகள் கணபதியைக் குறித்துள்ளார். ஆனால், மாணிக்கவாசக சுவாமிகளோ தம் திருவாசகத்தில் முருகனைக் குறித்துள்ளார். இதனால் தமிழகத்தில் கணபதி வழிபாட்டிற்கு முன்பு முருகன் வழிபாடே பரவியிருந்ததெனவும் கணபதி வழிபாடு அடிகளால் கூறப்படாமையால் முருகன் வழிபாட்டிற்குப் பின்னரே கணபதி வழிபாடு தமிழகத்தில் புக்கதெனவும் சொல்லின் மாணிக்கவாசகர் காலம் அவ்விருவர் காலத்திற்கு முந்தியது என்பது புலனாம்.

பல்வேறு வகைக்கொள்கைகளுக்கு இடனாகும் அடிகள் வரலாற்றைப்பற்றியும் ஆராய்ந்து வெளியிட இப்பொழுது அவகாசம் இல்லாமையால் தனித்ததோர் நூலாகச் செவ்விய முறையில் ஆராய்ந்து வெளியிட எண்ணியுள்ளேன். திருவருள் கூட்டுவிப்பதாக.

க. சு. நவநீத கிருஷ்ணபாரதி.

முற்பக்கத்தொடர்ச்சி:

## மங்கையர்க்கரசியார்.

[ஆ. சிவலிங்கனார்]

அமணர்களால் சம்பந்தர்க்கு என்ன தீங்கு விளையுமோ என்றஞ்சியிருந்த அம்மையாரும், குலச்சிறையாரும் அரசனுக்கு வெப்பு நோய் வந்ததற்கு அமணர்கள் செய்த தீச்செயலே காரணமென உணர்ந்தவர்களாய் அரசனிடம் போந்து, 'இந்நோய் அமணர் தீச்செயலால் வந்தது; சம்பந்தரால்தான் இந்நோய் தீரும்." என்றனர். அரசனுக்கு சம்பந்தர் பெயர் கேட்ட அளவிலேயே சிறிது அயர்ச்சி நீங்கியது. உடனே, "இவ்வமணர் செயலெல்லாம் நோய் அதிகப் படவே பயன்பட்டன. நீங்கள் கூறிய பிள்ளையால் நோய் நீங்குமானால், பார்ப்பேன் யானுற்றபிணியைத் தீர்த்து வென்றவர் பக்கம் சார்வேன்: விரகுண்டேல் அழையும்" என்றான். மகிழ்ச்சியுடன் இருவரும் சம்பந்தரை வணங்கி அழைத்து வந்தனர். அமணர் கொடுமைக்கு அஞ்சினர் அம்மையார், சம்பந்தர் அஞ்சாமை கூறினர். பின்னர் அரசன் நோய் தீர்க்க வேண்டிச் சமணர் விருப்பப்படியே அவர்கட்கு இடப்பக்கம் விட்டு வலப்பக்கமாகத் தாம் அமர்ந்து நோய் நீக்க முற்பட்டு ஐந்தெழுத்தோதி நீறு பூசித்தடவினார். வலப்பக்கம் வெப்புநோய் நீங்கியது. என்ன முயன்றும் சமணர்களால் நீக்கமுடியவில்லை. வலப்பக்கவெப்பமும் இடப்பக்கம் சேர்ந்து விட்டது. ஒருபால் தண்மையும் ஒருபால் வெம்மையும் கண்ட அரசன், வெம்மையின் வேகம் தாங்கமுடியாமல், சம்பந்தரையே மறுபக்கமும் நீக்க வேண்டினான். சம்பந்தரும் அவ்வாறே நீக்கினார். பின்னர் அனல் வாதம் புனல் வாதத்திற் கென்று எழுதிய பதிகத்தில் 'வேந்தனும் ஓங்குகவே' என்றமைத்துப் பாடியதால் பாண்டியன் கூனும் நிமிர்ந்தது. இவ்வாறு வெப்பநோவும் உடற்கூனும் நீங்கிய அரசன் நீறணிந்து சைவனானான். குடிகளும் அவ்வழியராயினர். சம்பந்தர் அருள் கண்டும் பெற்றும் அம்மையாரும் அமைச்சரும் அளவில் பேறு பெற்றனர். பாண்டியநாடு சைவநாடாயிற்று. அமண் கோயில்கள் சைவக்கோயில்களாயின. அம்மையார் எண்ணம் நிறைவேறியது.



காலம் பார்த்துக் கணவன் மனதைக் கவர இருந்த அம்மையார், கணவன் வாடிய முகத்துடன் பள்ளியறையில் இருப்பதைக் கண்டு காரணம் வினவியபோது நயமாக வினவியது அறிந்து மகிழ்தற்குரியது. "என்னுயிர்க் குயிராயுள்ள இறைவ" என விளித்துக் கொண்டதால் தாம் கேட்டற்குரிமையுடையவர் என்பதையும், பின்னர் "நீயுற்ற தென்னோ" என்றதால் தமக்குத் தெரியாதிருக்க முறையில்லை என்பதையும், தெரிவித்துக்கொண்டு "உள்ளத்து எய்தும் பருவரல் அருள் செய்" என்றார். 'சொல்க' என்னாது 'அருள் செய்' என்று வேண்டிக் கொண்டது தம்மடக்கத்தையும், பணிவையும் காட்டுகிறது. அரசன் உள்ளத்தைப் பற்றிக் கூறியபோது 'பன்னிய' உள்ளம் என்றார். பன்னிய என்றால் திரும்பத்திரும்பப் பேசுதல் என்பது பொருள். 'பன்னிப் பனனிப் பேசுகிறான்' என்று ஒருவன் ஒருவனைப் பற்றிக்கூற நாம் கேட்கின்றோமன்றோ? உள்ளம் பன்னுதலாவது ஒன்றைப் பற்றிப் பலவாறாக மீண்டும் மீண்டும் எண்ணுதலாம். உள்ளம் பன்னிய உள்ளம் ஆதலின் 'பின் தம் சொல்லையும் பன்னிப் பார்க்கும் தன்மையுடையது.' என்று தமது சொல்லையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதையும் குறிப்பாகக் கூறிக்கொண்டார். துன்பம் உண்டு என்பதை 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதற்கேற்பத் தெரிந்து கொண்டேன் என்று கூறுவார் போல "முன்னாள் மகிழ்ச்சியின்றி முகம் புலர்ந்திருந்தாய் இன்று" என்று கூறினார்.

மனவருத்தத்தோடிருந்த அரசன் தன் மனைவியார் கேட்டதற்குயாதோர் மாறுபாடும்கொண்டிலன். அவருடன் அன்பொடு உரையாடினான். அமளியிடத்தில் மனச்சோர்வுடன் இருந்தாலும் அம்மையார் அழகில் ஈடுபட்டவனாகவும் இருந்தான். அமளியிடத்தில் வந்த அம்மையாரைப்பற்றிப் "பொங்கெழில் தேவியார்" என்றார்சேக்கிழார் அரசன் அழகிலும் ஈடுபட்டிருந்தானென்பதை அம்மையார் வினாவிற்கு விடையிறுக்கும்போது, "காவிநீள் கண்ணினாய்" என விளித்ததிலிருந்தே அறிந்துகொள்ளலாம்.

இச்சமயமே அம்மையார் தம் கருத்தினை அரசனிடம் வெளிப்படுத்திக் கொள்ள ஏற்ற சமயம். அதனால் அரசன் பதில் கூறியதும் எச்சார்பிலும் சாராத நிலையில் பொதுப்பட, "அன்னவர் வாதுசெய்

தால் வென்றவர் பக்கம் சேர்ந்து துன்னுவதுறுதி யாகும் சுழிவுறேல் மன்ன' என்றார். சம்பந்தர் வெல்வர் என்ற உறுதி அவர்க்குண்டு; அதனால் துணிந்து கூறினார். கணவனை மீண்டும் சைவநெறியிற் திருப்புதற்கு இந்த இடத்தில் அடிப்படை அமைத்துக் கொண்டார். இந்த அடிப்படைக்கு மேலேயே வெப்பு நோயை அமணரால் நீக்க முடியாது போக, ஞானசம்பந்தரால் நீக்கிக் கொள்ளலாம் என அம்மையாரும் குலச்சிறையாரும் கூறினர் என்னலாம். என்னே அம்மையாரின் அறிவின் மாட்சி!

சைவ நெடுவழி சென்ற பாண்டியன், சமணக்கிளைவழி –(அம்மையாரின் எண்ணப்படி) முள் நிறைந்த கொடிய வழிச் சென்றமையால் அவ்வழி நீக்கிச் சைவ நன்னெறி செலுத்தித் துணை புரிந்த நம் அம்மையார் பாண்டியனுக்குச் சைவவழித் துணையாயினர்; ஏன்? பாண்டிய நாட்டிற்கே தமிழ் நாட்டிற்கே சைவவழித் துணையாயினர் எனலாம். சைவ நெறி தழைத்தோங்க வேண்டிய நலங்கள் யாவும் விளங்கியமையாலன்றோ ஞானசம்பந்தரால் மதுரை நகர்க்கு வந்த அன்று தமது பாடலில், 'மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை......பாண்டிமாதேவி'' என்று சிறப்பிக்கப்பட்டார். அம்மையாரைப் பற்றி நாம் மிகுதியும் கூறுதற்கியலாது. சேக்கிழார் கூறியதையே கூறி அமைகின்றோம்.

பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர்
போனகஞா னம்பொழிந்த புனிதவாக்கால்
தேசுடைய பாடல்பெறும் தவத்தினாரைச்
செப்புவதியா மென்னறிந்துதென்னர்கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் தனக்குச்சைவ
வழித்துணையாய் நெடுங்காலம்மன்னிப்பின்னை
ஆசில்நெறி யவரோடும் கூட ஈசர்
அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும்பெற்றார்





ஓம்

# ஸ்ரீ கேதார்-பத்திரி யாத்திரை.

"வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே"

இது சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய திருக்கேதாரப் பதிகத்தின் முதலாவது தேவாரமாகும். இத்தேவாரத்தை அறியாத தமிழரில்லையென்றே கூறலாம். ஏனெனில் ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களும் தங்கள் தங்களுக்கேற்றவகையில் வெவ்வேறு கருத்துக்களில் எடுத்தாளுவது வழக்கமாகிவிட்டது. வாழ்க்கையில் சலிப்புத்தட்டியவுடனே எழுத்தறியாதவர்கள் கூட "வாழ்வாவது மாயம்" என்று முணு முணுப்பதைக் காண்கின்றோம். எதற்கெல்லாம் இந்த நீண்ட முன்னுரை என்று தானே கேட்கின்றீர்கள். சொல்லுகிறேன் கேளுங்கள்:–

திருக்கேதீச்சரம் என்றால் இந்தியாவில் எங்கோ உள்ள ஒரு சிவஸ்தலம் என்று கூறுகின்ற இலங்கையர்கள் இன்றும் இருக்கின்றார்கள். அதே போல் கேதாரம் என்றால் தென்னிந்தியாவில் இருக்கின்ற ஒரு ஸ்தலமாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்திருக்கின்ற அன்பர்கள் பலர் உளர். கேதாரம் என்பது இமாலயத்தில் பனிமூடிய சிகரங்களுக்கிடையே அமைந்துள்ளது என்பதை வாசகர்களுக்கு முதலில் நினைவூட்டுகிறேன்.

அத்தகையதொரு சிவஸ்தலத்திற்கு இவ்வாண்டு சித்திரை விடுமுறையின் போது யாத்திரை செய்யும் பேறுகிடைத்தது. எமது யாத்திரை அநுபவங்களைத் தொடர்ந்து கூறினால், இமய யாத்திரை செல்லும் இலங்கை வாசிகளுக்கு ஓரளவாவது பயன் படலாமென்றுகருதுகின்றேன்.

யாத்திரையைப்பற்றிக்கூறப்போகின்றேன் என்றதும்நான்தான் ஓர் யாத்திரைவாசி நீங்கள் எல்லாம் வேறு யாரோ என்று எண்ணிவிடாதீர்கள். நீங்கள் எல்லாரும் யாத்திரைக்காரர்களே; உலகிலுள்ள ஜீவகோடிகள் எல்லாம் யாத்திரை வாசிகளே. எல்லா ஜீவர்களும் இறைவனது திருவடியை நோக்கி யாத்திரைசெய்துகொண்டிருக்கின்றன. ஆதலால் எங்கள் எல்லாருக்கும் திருவடி யாத்திரைக்காரர் என்று பெயர். கைலாய யாத்திரைமுதல் கதிர்காம யாத்திரை ஈறுக எத்தனையோ யாத்திரைகளைப்பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவற்றுள் எல்லாம் எந்த யாத்திரை சிறந்தது என்று கேட்பீர்களானால் திருவடி யாத்திரைதான் சிறந்தது என்று கூறுவேன். உண்மையை நோக்கி உள்ளம் எவ்வளவு தூரம் ஆழ்ந்து செல்கிறதோ அதுதான் சத்திய யாத்திரையாகும். கைலாய யாத்திரையும் கதிர்காம யாத்திரையும் இவ்வுண்மையை அறிவதற்கே பயன்படுவன.

ஆதலால் நீங்கள் யாத்திரைக்காரர்தான் யானும் ஒரு யாத்திரிக சகோதரனே. அந்த உரிமையிலேதான் எனது அனுபவங்கள் உங்களுக்குப் பயன்படலாம். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற இப்பெரியார் வாக்கை ஞாபகப்படுத்துகிறேன்,

*"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு*
*வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"*

என்ற தாயுமானுரின் பாடல் சிந்தித்தற்குரியது.

யாதிரையென்றுல் ஏதோ ஒரு புகைவண்டியில் ஏறிக் குறித்த இடத்தை அடைந்து திரும்புவதுதானே என்று வீட்டிலிருப்பவர் நினைப்பதுண்டு. ஜனக்கூட்டத்திலே கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்யாதவர்களுக்கு யாத்திரைக் கஷ்டங்களை விளங்கிக்கொள்வது ஓரளவு கஷ்டமாகத்தானிருக்கும். யாத்திரை செய்பவரும் தாம் அடைந்த இன்பத்தினுல் யாத்திரைக் கஷ்டங்களை மறந்துவிடுகிறுர் யாத்திரை வாசிகள் இன்பத்தைக் கூறுபவர்களேதவிர துன்பத்தை கூறும் வழக்கம் மிகக் குறைவு. அது அவர்கள் பண்பு

தலைமன்னுர்ப் பாலம்வரை இலங்கைப் புகையிரதத்தில் செல்லவேண்டும். புகையிரதத்தை விட்டு இறங்கியதும் இலங்கைத் தீர்வை



அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் பதிலளித்து விட்டு கப்பலில் ஏறவேண்டியது. கப்பலிலேயே தென்னிந்திய சிற்றுண்டிவகைகள் எங்களை வரவேற்கின்றன. கப்பலில் எப்பொழுதும் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்தலே புத்திசாலித்தனமாகும். சிறிது பணம் கூட என்றுலும் அதனுல் பல நன்மைகளுண்டு.

கடலில் இக்கரையைப் பார்த்துக் கொண்டே கண்ணுக்கெட்டிய தூரம் பிரயாணம் செய்யலாம். இக்கரை மறைந்ததும் திரும்பிப்பார்த்தால் அக்கரையைக்காணலாம். இன்னும் சிறிது தூரம்சென்றதும் இராமேஸ்வரம் கோபுரம் மலைபோல் உயர்ந்து தெரிவதைக் காணலாம்.

கப்பல் தனுஷ்கோடியை அடைந்ததும் கப்பலை விட்டிறங்கி இந்திய மண்ணில் கால்வைக்கிறேம். அங்கு இந்தியத் தீர்வை அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் தகுந்த பதில் அளித்துவிட்டு மண்டபத்தின் வெளியேசென்றுல் சென்னை செல்லும் புகையிரதம் எங்களை ஏற்றிச் செல்வதற்குக் காத்து நிற்கின்றது. புகையிரதத்தில் ஏறி உட்காரவேண்டியதுதான் தாமதம் நல்ல சாம்பார் சாதம் தயிர்ச் சாதம் எல்லாம் உங்களைத் தேடியேவரும். அக்கரையிலும் இக்கரையிலும் தீர்வை அதிகாரிகள் படுத்தும் பாட்டைக் கண்டவுடனே சிலர் இனிமேல் இந்தியாவுக்கு வருவதில்லையென்றும் தீர்மானித்து விடுவதுண்டு. அவையெல்லாம் நீங்கள் நேரில் அநுபவித்தறியவேண்டியவை.

இந்தப் புகையிரதத்தில் ஏறிவிட்டால் உங்களுக்குச் சர்வசுதந்திரமும் உண்டு. எந்த அதிகாரியும் அதிகாரம் செலுத்தவரமாட்டார்கள். அப்படியென்றுல் பெட்டிகளைப் போட்டது போட்டபடி விட்டுத் தூங்கிவிடக்கூடாது. சிலர் எல்லாப் பொருளையும் தம்முடையது போலப் பாவிப்பவர்கள். நீங்கள் தூங்குகிற நேரம் பார்த்து அதைத் தூக்கிக்கொண்டு இறங்கிவிடுவார்கள். உங்கள் "பாஸ்போர்ட்" எல்லாம் பெட்டியோடு போய்விட்டால் இலங்கை வரமுடியாது. இந்தியாவும் ஏற்றுக்கொள்ளுமோ யாரறிவார்? கூறுமல் சந்நியாசம் கொள்ளவேண்டியதுதான்.

(தொடரும்)

# தெய்வ பக்தியும் நேர்மையுமே நமது முக்கிய தேவை.

**[ராஜாஜி]**

நமது மக்களிடம் ஒழுக்கம் குறைந்து வருகிறது. தேச அபிவிருத்திக்கு இதுவே தடையாயுள்ளது. இது தான் நம் தேசீய வாழ்வில் காணப்படும் பிரத்தியட்சமான பெரிய கஷ்டம்.

நம் நாட்டுக்கு எது தேவை? மூலதனம் தான் என்கின்றனர் சிலர். மற்றும் பலர் வேறு என்னவோ தேவைஎன்கின்றனர். நான் கூறுகிறேன் நேர்மை தான் தேவை என்று. அது நம்மிடமிருந்தால் எவ்வளவோ சாதித்து விடலாம்.

நம் நாட்டின் செல்வத்தைச்சரியாக விநியோகித்தால் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்து விடுமென்று சிலர் கூறுகின்றனர். இது சரியான பரிகாரமல்ல. நமக்குத் தேவையானது சம விநியோகமல்ல. செல்வத்தை அதிகமாக உற்பத்தி செய்வதே நம் நாட்டின் தேவை.

தேச பக்தியால் செல்வத்தை உற்பத்தி செய்து விடலாம் எனச் சிலர் நினைக்கின்றனர். நாம் சுதந்திரப்போராட்டத்தில் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறோம். ஆகவே தேசபக்தி தேவையென்று சொல்வது பொருத்தமாகாது.

நமது தேசம் மகத்தான தேசம் என்றும், பண்டைய பெருமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்றும், அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டுமென்றும் கூறினால், ஜனங்கள் சரியென்று ஒப்புக்கொள்வார்கள். ஆனால் சரியாகச் சிந்திப்பது ஒருவிஷயம். உழைப்பது வேறு விஷயம், உழைப்பினால் தனக்கு ஏதாவது கிடைக்குமா வென்பதை மனிதன் யோசிக்கிறான். ஆகவே ஊக்கம்—வருமான எண்ணம் அவசியமாகிறது. விஷயத்தைத் தீர்க்கமாகப் பரிசீலனை செய்தால் நேர்மை என்ற நிரந்தரப்பண்பாட்டைச் சிருஷ்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது புலனாகிறது. இதற்கு நாம் மதம் அல்லது ஆரம்பகால குடும்பப் பழக்கத்தை அல்லது கல்விப் பழக்கத்தையே நம்ப வேண்டி இருக்கிறது. எப்படி—எதற்காக என்று காரணம்கேட்காமலேயே சரியான காரியங்களைச்செய்யவும்,



சரியான முறையில் சிந்திக்கவும் பேசவும் இயற்கையாக உணர்ச்சி ஏற்படவேண்டும். ஏன் நேர்மையாக நடக்கவேண்டும். என்றெல்லாம் பலர் கேட்கின்றனர். இம்மாதிரி கேட்க ஆரம்பித்தால் நாம் அழிவோம். கேள்வி கேட்காமலேயே, சரியான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியை வளர்த்தால் தான் நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

துரதிர்ஷ்ட வசமாக சமீப வருஷங்களில் நிகழ்ந்துள்ள அநேக சம்பவங்களால் குடும்பங்களில் மதவழிபாடு மறைந்து விட்டது. ஆபீஸுக்கு, பள்ளிக் கூடத்துக்கு போவதற்குத்தான் அவகாசமிருக்கிறது. மதத்திலும் நாம் நம்பிக்கையிழந்து விட்டோம். நம் பள்ளிக்கூடங்கள் மதச்சார்பற்றவையாகி விட்டன நல்லொழுக்கத்தைப்போதிப்பதற்கு இடமில்லாமற் போய்விட்டது. எனவே ஜனங்கள் கேள்வி கேட்காமல் இயற்கையாகவே நேர்மையாக நடந்து கொள்ளுமாறு செய்வதெப்படி என்று சிந்திக்கவேண்டும். இது அரசியல்வாதிகள் மட்டும் தீர்த்து விடக்கூடிய பிரச்சனையல்ல. எல்லோரும் ஒன்று சேர்ந்து வழிகாணவேண்டும். ஆகையால்தான் நான் 'முட்டாள் தனமாக' எப்பொழுதும் கடவுளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். கடவுளைப் பற்றிப் பேசுவதற்குத் தனி சமயமென்று ஒன்றுமில்லை. எப்போது வேண்டுமானாலும் பேசலாம் ஒரே ஒரு வரையறையுண்டு. அதாவது கேட்பவர்கள் சலிப்படையக்கூடாது என்பதே அது.

ஒவ்வொருவரும் அவரது மதம் எதுவாயினும் சரி, குழந்தைகளிடமும், மற்றும் தம்மைச் சுற்றியுள்ளவர்களிடமும் சென்று அவருடைய சொந்த மதத்தில் பற்றுவைக்க வேண்டிய அவசியத்தைவற்புறுத்த வேண்டும். எந்த மதமும் சிறந்தது தான். இந்தியாவில் எல்லாமதங்களும் இருக்கின்றன.

பள்ளிக்கூடங்களில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த பிள்ளைகளிருப்பதால் அங்கு மதபோதனை செய்வது கஷ்டம். அது அவசியமுமில்லை. ஆனால் மாணவர்கள் மனதில் மதப்பற்றை ஏற்படுத்தலாம் இளம் மனதில் இவ்வுணர்ச்சியைப் புகுத்துவது சுலபம். அன்றாட வாழ்க்கையில் மதத்தின் அவசியத்தைக் குறைக்கும் காரியங்களை ஆசிரியர்கள் செய்வதோ விஷயங்களைப் பேசுவதோ கூடாது. பூராவும் மதம் வழியதாக இருக்க வேண்டுமென்று மகாத்மாஜீ உபதேசித்த தத்துவத்தை ஒவ்வொருவரும் பின்பற்றுவது மிக அவசியம் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் மதம் இடம் பெற வேண்டும்.

## ஏழையின் துணிவு

[வன்னியூர் வேலவன்]

பஞ்சம் பரவி ஊர்களிலே
பட்டினி தலைவிரித் தாடுகையில்
ஐஞ்சும் துறந்த புத்தபிரான்
அன்புடைச் சீடரைத்தான்கேட்டார்

பாவம் பசியால் மடிபவர்மேல்
பற்று வைத்துக் காப்பாற்றும்
தூய கடனை ஆற்றுதற்கு
துணிவு யார்க்கு உண்டென்றார்.

வட்டித் தொழிலின் வருமானம்
வருந்து பவர்க்கு உணவூட்ட
சொட்டும் காணாதே யென்று
சொன்னான் செட்டி சோகத்துடன்

மன்னுயிர் காக்கும் நற்பணிக்கு
என்னுயிர் வேண்டினும் தருகின்றேன்
புண்ணியனே நான் சொல்வதென்னே
போதுமா என்றான் தளபதியும்

வருண பகவான் கருணையின்றி
வாடிப் பயிர்கள் மடிகையிலே
தருமபாலன் தான் சொன்னான்
தன்னால் வரிக்கே வழியில்லையாம்.

பிச்சை யெடுத்து நிதம் பிழைக்கும்
பேதைப் பெண் நல் சுப்பரிகா
இச்சை மிகுதியா லெழுந்து
இன்பத் துடனே விளம்புகின்றாள்.

பட்டினி யாலே வாடு வோர்க்கு
பாரில் உணவு நானளிப்பேன்
எப்படி உன்னால் முடியு மென்றார்
அப்படி யேங்கி இருந்தவர்கள்

ஏழை தானே நான் மிகவும்
இருப்பவர் அத்தனை பேர்களிலும்
ஆனதினாலே தான் எனக்கு
அத்தனை துணிவு வந்ததென்றாள்.

பணம் போயிடு மென்றேங் குகிறீர்
பணம் பற்றாதென்றும் இரங்குகிறீர்
பரம ஏழை நான் அதனால்
பற்றும் ஏக்கமும் எனக்கில்லை.

அல்லாமலும் அவள் தொடர்ந்தேதான்
அத்தனை பேரின் வீட்டினிலே
எல்லாம் நிறைய உண்டென்றாள்
எந்தன் வைப்பும் களஞ்சியமும்.



## ஆலய வழிபாட்டின் பலன்.

(வல்லிபுரம்)

1 உலகில் எத்தனை பாடசாலைகள் இருந்தாலும், மாணவர்களுக்குப் போதிப்பது அறிவு ஒன்றையே. அதுபோல் உலகில் எத்தனை சமயங்கள் இருந்தாலும் போதிப்பது சன்மார்க்க நெறியையே.

2 எந்தப் பாடசாலையில் படித்தாலும் மாணவரின் பொது நோக்கம் பரீட்சையில் சித்தி பெறுதலே. அதுபோல் எல்லாச் சமயத்தவர்களின் பொது நோக்கம் கடவுளை அடைவதே.

3 எப்பாடசாலையிலிருந்து எந்தப் பரீட்சைக்குப் படித்தாலும் புத்தகம் அவசியம் தேவை. அதே போல் எச்சமயத்திலிருந்து எப்பெயரைச் சொல்லி வழிபட்டாலும் ஆலயம் அவசியம் தேவை.

4 படித்து அறிவில் முதிர்ந்தவனுக்குப் புத்தகம் தேவையில்லை. அதுபோல் ஆலயவழிபாட்டில் மனசை ஒடுக்கித் துறவு பூண்டவனுக்கு ஆலயம் தேவையில்லை.

5 உண்மையில் துறவியானவனுக்கு விருப்பு வெறுப்பு தோன்றா, இன்பதுன்பம் ஏற்படா. காமம் கோபம் போன்ற பகைவர் நெருங்கார். அப்பொழுது உதவியின்றித்தானாகவே தேடிக்கடவுளையடைய முடியும். ஆனால் மாயை வலையில் மனசைச் சிக்கவிட்டு வெளிவேஷம் போட்டுக் கொண்டு, ஆலய வழிபாடு அவசியமற்றது, சன்மார்க்க போதனைகள் பொய் கடவுளின் பெயரைச் சொல்லி உலகை ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லித் திரிபவர்கள், ஐம்புலன்களின் தூண்டுதலுக்கு இசைந்து அற்ப சுகத்தைக் காட்டி அழிவைக் கொடுக்கும் செயல்களில் ஈடுபட்டு நொந்து அழிவர். அழியா இன்பமாகிய பேரின்பத்தை அடையமாட்டார்.

6 கவனத்தோடு படித்தால் அறிவு வளரும் அடக்கத்தோடு வழிபட்டால் மனம் தூய்மையடையும். அறிவைப் பெற்றவன் பரீட்சைகளில்சித்தி பெறுவான், மனதை அடக்கியவன் கடவுளை அடைவான். மன அமைதியோடு எந்தச் சமயத்திலிருந்து எந்த ஆலயத்தைத் தொழுதாலும் கடவுளை அடையலாம். சமயச்சண்டை வேண்டாம் மன அமைதியே வேண்டும்.

# நபி நாயகம் அவர்களின் போதனைகளும் - வாசகங்களும்.

[தென்னாப்பிரிகா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.]

நபிகள் நாயகம் ஒரு சந்தைப் பக்கமாகப் போயிருந்தார். அங்கே ஒருவன் தானியத்தைக் குவித்து வைத்திருந்தான். நபிகள் நாயகம் தானியக் குவியலுக்குள் கைகளை விட்டுத் துழாவிப் பார்க்கும்போது, அவர் கைவிரல்கள் ஈரமாயிருப்பதைக் கண்டார். உடனே நபிகள் நாயகம் "தானியக்காரனே! என்ன இது?". என்று கேட்டார்.

"தீர்க்கதரிசி அவர்களே! தானியத்தில் மழை பெய்துவிட்டது" என்றான் தானியவியாபாரி.

"அப்படியானால் நீ ஏன் நனைந்த தானியத்தை மேலாகக்குவித்து வைக்கவில்லை? அப்படிச்செய்தால் எல்லோருக்கும் உண்மை தெரியுமல்லவா? நம்மை ஏமாற்றுகிறவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களாக மாட்டார்கள்". என்றார் நபிகள் நாயகம்.

ஒருமனிதன் சாகும்போது அவனுடைய செயல்களும் ஒடுங்கி விடுகின்றன; ஆனால் மூன்று விஷயங்கள் மட்டும் எஞ்சி நிற்கின்றன. [1] அவனுக்குப் பிறகும் தொடர்ந்து நடக்கும் அவனுடைய தர்ம காரியங்கள்; [2] எல்லோருக்கும் பயன்தரும் அவனுடைய அறிவு; [3] அவனுக்காகப் பிரார்த்தனை செய்யும் அவனுடைய சந்ததிகள்.

முகமத் நபி ஒருநாள் தம் மகள் வீட்டுக்குப் போனார், ஆனால் அவளைப்பார்க்காமல் திரும்பி வந்துவிட்டார். இப்படி வழக்கத்துக்கு மாறாக அவர் நடந்துகொண்டதை, பாத்திமா தம் கணவர் அலியிடம் கூறினாள். அலி உடனே நபியிடம் சென்று விஷயத்தை விசாரித்தார். அப்போது நபி "அவளுடைய வாசலில் ஒரு பட்டுத்திரை தொங்கியிருக்கக் கண்டேன். அதனால்தான் அவளைப் பார்க்காமல் வந்துவிட்டேன்" என்று கூறினார். இதைக் கேட்டதும் பாத்திமா அவரிடம் ஓடிவந்து "எப்படிநடந்துகொள்ளவேண்டும்?"



என்று கேட்டாள். "பட்டுத்திரையை விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிடு; பட்டுத்திரை நமக்கு வேண்டாம்" என்று மகளிடம் நபி சொன்னார்.

ஒருசமயம் ஒருமனிதன் தனக்கு மதபோதனை செய்யுமாறு, மகம்மது நபியிடம் வேண்டிக்கொண்டான். அதற்கு நபி "கோபத்துக்கிடங்கொடாதே" என்று கூறினார். அந்த மனிதன் மதபோதனை செய்யுமாறு திரும்பத் திரும்பப் பலமுறை கேட்டான். ஒவ்வொருதடவையும் நபிநாயகம் "கோபத்துக்கு இடங்கொடாதே" என்றே கூறிவந்தார். தீய ஒழுக்கமுடைய பெண் ஒருத்தி, ஒரு புண்ணிய காரியத்தைச் செய்தாள். அதற்காகக் கடவுள் அவளுக்கு மன்னிப்பு அளித்தார். அவள் செய்த புண்ணியகாரியம் என்ன தெரியுமா? ஒருசமயம் ஒரு நாய் தாகமிகுதியால் ஒரு கிணற்றினருகில் தரையை நக்கிக்கொண்டு, தண்ணீரில்லாமல் சாகும் தறுவாயில் துடித்துக்கொண்டிருந்தது. அந்தப் பெண் அதைப் பார்த்தாள் தண்ணீர் இறைப்பதற்குச் சாதனம் ஒன்றுமில்லை. எனவே, தன் சீலையைக்கிழித்துக் கிணற்றினுள் விட்டுத் தண்ணீர்எடுத்து, நாயின் வாயில் அந்தத் தண்ணீரைப் பிழிந்து அதன் உயிரைக் காப்பாற்றினாள். இதுதான் அந்தப்பெண்செய்த புண்ணியகாரியம்,

*இனி நபிகளின் நல்லுரைகள் சில.*

யார் பிறருடன் அதிகமாகச் சண்டைசச்சரவு செய்கிறார்களோ அவர்கள் தான் அதிகமாகக் கடவுளுடைய கோபத்துக்கு ஆளாகிறவர்கள்.

கல்விக்கு உயிரைக்கொடுத்தவன் ஒருபோதும் மரணம் அடைவதில்லை. கல்விமான்களைக் கண்ணியப் படுத்துவோர், என்னைக் கண்ணியப்படுத்துவோராவர்.

கண்ணியமான முறையில் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு வேண்டியதைச் சம்பாதிப்பவர்களே, ஆண்டவனிடத்தில் அருமையான பிரியமுள்ளவர்களாயிருக்கின்றார்கள்.

தன் கண்முன்னிலையில் இருந்தாலும் இல்லாவிடினும், தன்னுடைய சகோதரனைக் காக்கக் கூடியவனே உண்மையான மனிதனாவான்,

ஆண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களிடத்திலும், தன்னுடைய சொந்தக் குழந்தைகளிடத்திலும் பட்சம் பாராட்டாத மனிதனிடத்தில், ஆண்டவனும் பட்சம்பாராட்டமாட்டான்.

மகா மேன்மையான காரியங்கள் யாவை? ஒரு மனிதனுடைய மனதைச் சந்தோஷப் படுத்துவதும், பசிப்பிணியுடையவருக்குப் போஜனம் செய்து வைப்பதும், சிறுமைப் பட்டவருக்கு உதவி புரிவதும், துக்கித்திருப்பவரின் துயரைப் போக்குவதும், துன்பமடைந்தவர்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதும் அப்படிப்பட்ட காரியங்களாகும்.

நல்லவனாயினும், கெட்டவனாயினும், யாராயிருப்பினும் இவ்வுலகத்திலுள்ள மனிதனிடத்தில் பிரியமாயிருங்கள். தீய மனிதனிடத்திலும் பிரியமாயிருப்பதால், அவன் அத்தீமையினின்றும் விடுபடுகிறான். இதனால் வானுலகில் உள்ளவர்களே உங்களிடத்தில் பிரியமாயிருப்பார்கள்.

சுவர்க்கம் புகுவதற்கு அருகர்களாயிருப்பவர்கள் மூவகைப்படுவர். முதலாவது சற்குண சீலனாயிருந்து தன்குடிகளுக்கு நன்மையைச்செய்யக் கூடிய நீதிபதியான மன்னன்; இரண்டாவது தன் பந்து மித்திரர்களிடத்திலும், ஏனையோரிடத்திலும் தயாளமாயிருக்கக்கூடிய பிரியமுள்ள மனிதன்; மூன்றாவது சற்குண சீலன். அவனவனும் தன் தன்னுடைய குண விசேஷத்துக்குத் தக்கவாறே, ஆத்ம ஞான வழியிலும் ஆண்டவனால் கை தூக்கி விடப்படுகிறான்.

கற்றோர் என்பவர் யாவர்? தாம் கற்றுக் கொண்டதைப், பழக்கத்தில் கொண்டு வந்து அநுஷ்டிப்பவர்களாயிருப்பவர்களே.



# உருவ வழிபாடு.

[கங்காதரன்]

ஆசை அகந்தை அறியாமை முதலிய கீழியல் குணங்களுக்கு அடிமையாகித்துயருறும் சாதாரண மனிதன் தன்னை சிவவாக்கியர் போன்ற மகான்களாகக் கருதிக் கொண்டு உருவ வழிபாட்டிற்கும் சமய நியமங்களுக்கும் பின்புள்ள பேருண்மையை உணர முயலாமல் அவற்றைக்கண்டிக்க முயல்வது பெரும் பிழையாகும்.

பக்தன் தான் வழிபடும் உருவை கல்லாகவும் மண்ணாகவும் கருதுவதில்லை. தன்னை ஆட்கொண்டு உய்விக்கும் பொருட்டுத் தன்முன் எழுந்தருளியிருக்கும் பரம்பொருளாகவே பாவிக்கிறான்.

பக்தனுக்கும் அவன் வழிபடும் உருவத்திற்கும் உள்ள சம்பந்தம் எத்தகையது என்பதை தெய்வ நம்பிக்கையற்ற லோகாயத மனப்பான்மையுடைய நவீன சிந்தனையாளர்களால் புரிந்துகொள்ளமுடியாது

தாயுக்கும் சேயுக்கும் உள்ள சம்பந்தம் எத்தகையது என்பதை மலடியால் ஊகிக்க முடியுமா? தன்னுள் கடவுளைக் காணாதவனால்தான் கடவுளென்பதை உணராதவனால் வாழ்வின் கேள்விகளுக்கு விடைகாணவும்; வாழ்வில் உண்மையான இன்பத்தை அநுபவிக்கவும் முடியாது. தான்வழிபடும் உருவில் இறைவனைக் காண விழையும் பக்தன் காலக்கிரமத்தில் தன்னுள்ளும் உலகெங்கும் இறைவனைக்கண்டு தனியுணர்வற்று முடிவில் அப்பரம்பொருளாகவே ஆகுகின்றான்.

எல்லாம் அவனே, அவனே எல்லாம் என்று உணர்வதுவே ஆத்மானுபவத்தின் சிகரமாகும். இதையே "தத்வமஸி" அதுவே நீ என்று உபநிடதங்கள் கோஷிக்கின்றன.

நவீன சிந்தனையாளர்கள் கருதுவது போன்று நாம் கடவுளென வழிபடுவது பண்படாத மனோ பாவனையில் உருவானதும் அநுபவத்தில் உணர முடியாததுமான ஒரு கற்பனைப் பொருளையன்று. நாம்புலன்களினால் அறியக்கூடிய ஸ்தூலப் பொருள்களைவிட அது இன்னும் ஸ்திரமாகவும் தெளிவாகவும் உணரக்கூடிய அநுபவப் பொருளாகும் சிருஷ்டிக்குப் பின்புள்ள இப்பேருண்மையை உணர்ந்து, அதை வாழ்வில் வெளிப்படையச் செய்வதுடன் அதன் திருவுளப்படி இயங்கும் கருவியாக நம்மை நாம் மாற்றிக் கொள்வதுவே வாழ்வின் குறிக்கோளும் முடிவற்ற நீண்ட ஜீவ யாத்திரையின் இறுதி இலக்குமாகும்.

(தொடரும்)

# ஆசைப்பேய்.

[சரஸன்]

'போதும் என்னும் மனமே பொன்செய்யும் மருந்து' என்பது பழமொழி. ஆசையை ஒழிப்பவன் தான் இகத்திலும் பரத்திலும் இன்பம் காண்கிறான் என்பர் பெரியோர்.

ஆனால் இந்த ஆசை நம்மைவிட்டுச் சடுதியில் விலகுகின்றதா? அதுதான் கிடையாது! மனிதன் பிறக்கும் போதே, கூட ஆசையும் பிறந்துவிடுகின்றது. ஒரு இரண்டு வயதுக்குழந்தையிடம் ஒரு "பிஸ்கட்டு டப்பியை"த் திறந்து அதிலிருந்து ஒன்றோ இரண்டோ பிஸ்கட்டுகளை எடுத்துக் கொடுத்தால், அது என்ன செய்கிறது? எல்லாவற்றையும் கொடுத்து விடும்படி அடம்பிடிக்கின்றது. 'போதும் என்னும் மனமே பொன் செய்யும் மருந்து என்னும் தத்துவம் அதற்கு எங்கே தெரியப் போகிறது?

மனிதனைச் சூழ்ந்துள்ள பலவிதமான பிரச்சனைகளுக்கும் மூல காரணம் ஆசைதான் என்று கூறலாம். கூலிக்காரன் முதல் கோடீசுவரன் ஈறாக எல்லாரையும் ஆசை என்னும் பேய் ஆட்டிவைக்கிறது.

ஒரு கூலிக்காரன் தினமும் இரண்டு ரூபாய் கூலிக்கு ஒரு இடத்தில் வேலை செய்கிறான். நாளடைவில் இன்னும் கொஞ்சம் அதிகக்கூலி கிடைக்கக்கூடிய இடம் கிடைக்குமா என்ற மனப்பான்மை ஏற்பட்டு விடுகின்றது. அவனுக்கு ஆசைமிகுதியில் தன்தேவைகளைப் பெருக்கிக்கொண்டே போவதால், வருமானம் போதாமற் போய், அதன் பொருட்டு வருமானத்தைப் பெருக்க வகைதேடுகிறான் அவன்.

பணம் படைத்தவனும் அப்படித்தான். நமக்குக் கிடைத்த பணம் போதுமானது என்ற மன நிறைவுடன் உள்ள பணக்காரன் காணப்படுவது துர்லபம். தன் செல்வத்தைஎந்த வகையில் விருத்தி செய்யலாம் என்ற எண்ணத்திலேயே கருத்தைச் செலவிடுகிறான் பணக்காரன். ஆசையின் பயனாய்த்தான்!



மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையில்தான் ஆசை குடிகொண்டு வருகின்றது என்பதில்லை. பல பொதுஸ்தாபனங்களிலும் கூட இந்த ஆசை நுழைந்து விடுகின்றது. அடக்கத்துடன் சேவை புரியும் ஸ்தாபனங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். மற்ற ஏனைய ஸ்தாபனங்கள் எல்லாம் புகழுக்காகவும் பெருமைக்காகவுந்தான் இயங்குகின்றன. காரணம்: புகழ், பெருமை இவைவேண்டுமென்ற ஆசைதான்.

இன்று அரசியல் உலகிலே நடைபெறும் ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் அஸ்திவாரம் ஆசை என்னும் பேய் அதைப்பிடித்திருப்பதுதான். ஒவ்வொரு அரசியல் கட்சியும் மக்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு, பதவிக்காகவும் செல்வாக்குக்காகவும் போட்டியிடுகின்றன.

உலக வல்லரசுகள் இன்று அணுக்குண்டும், ஹைட்ரஜன்குண்டும், நைட்ரஜன் குண்டும் தயாரிப்பதில் தீவிரமாய் முனைந்திருக்கின்றன. சமாதானத்தையே விரும்புவதாய்ப் பறைசாற்றும் இந்த வல்லரசுகள், உலகத்தை நாசப்படுத்த வல்ல இந்த ராட்சஸ ஆயுதங்களைத் தயாரிப்பது விந்தைதான். தங்கள் ஆதிக்க ஆசையைப் பெருக்கிக் கொள்ள வல்லாமல் வேறெதற்காக, அவை இம்மாதிரி பயங்கரப் போர்க்கருவிகளைத் தயாரிக்கின்றன.

இவ்விதம் உலகிலே ஆசையை அடிப்படையாகக் கொண்ட செயல்கள் தான் தினமும் நடைபெறுகின்றன. போதும் என்ற மனம் படைத்த சமுதாயத்திலே அணுக்குண்டுக்கும் இடமேது?

உலக விவகாரங்களில் ஆசையை ஒழித்து, அந்த ஆசையை ஆண்டவன் பாற்செலுத்தினால் எத்தனை பயன்பெறக்கூடியது?இவ்விதம் உலக விஷயங்களில் ஆசையைஅகற்றி ஆண்டவன் திருவடிகளில் ஆசையை ஏற்படுத்திக் கொள்ளச் சாதனமாய் இருப்பது, நம் புராதன நூல்கள்தான். அவற்றைப்பக்தியும் சிரத்தையும் கொண்டுபடிக்கவும் கேட்கவும் செய்தால், நம்மிடையே குடிகொண்டுள்ள அற்ப ஆசைகள் விலகி, பேரானந்தத்தைப்பெறக்கூடிய ஆசைகள் தாமாக நம்மை ஆட்கொண்டுவிடும்.

## நாம் யார்? எம் கடமையென்ன?

[ஓர் ரமணபக்தன்]

1 நாம் பிறக்கும்பொழுதே வீடு மனைவி மக்கள் பகைவர்களோடு பிறந்தவர்கள். எம் பிறப்பிடம் கருவூர். எமக்கு 9 வாசல்களை யுடைய ஓர் வீடுண்டு. அவ்வீட்டில் ஓர் மகானும் நாமும்; எம் மனைவியும், 5 பிள்ளைகளும், அடுத்துக் கெடுக்கும் இரண்டு ஜென்ம விரோதிகளும் உடன்பிறந்த அதன் 8 சகோதரர்களும் வசிக்கிறோம்.

2 மகானென்பவர் கடவுளுக்கு ஒப்பான மகா ஞானியும் தீர்க்கதரிசியும் மானவர் எப்பொழுதும் உண்மையே பேசுபவர்.

3 நாம் அவருடைய உண்மை பக்தனுகவும் புத்திசாலியாகவுமிருக்கவேண்டியவர்கள்.

4 எம் மனைவியோ நன்மை தின்மைகளை உணரமுடியாத பேதை பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதில் மிகவும் விருப்புடையவள். இதற்காக எம்மோடு சதா வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருப்பவள்.

5 எம் பிள்ளைகளோ அடங்காப் பிடாரிகள். மூத்தவன் சிற்றின்பப் பிரியன். இரண்டாவது மகன் போசனப்பிரியன் மூன்ருவது மகன் காட்சிகளில் விருப்பமுடையவன். நான்காவது மகன் வாசனைத் திரவியங்களில் விருப்பமுடையவன். ஐந்தாவதுமகன் சங்கீதத்தில் விருப்பமுடையவன்.

6 ஜென்ம விரோதிகளுள் ஒருவன் பேராசையும் பொருமையுமுடையவன். மற்றவன் முற்கோபியும் கொலைகாரனுமாவான். அவர்களைச் சேர்ந்த இன்னும் 8 பேர்களுண்டு.

**அப்படிப்பட்டவர்கள் யார்?**

1 வீடு—சரீரத்தைக் குறிப்பிடுகிறது.

2 மகான் – வித்துக்குள் அதை ஈன்ற மரமிருப்பதுபோன்ற பரமாத்மா.

3 நாம்—ஜீவாத்மா (புத்தி)

## வரமாகிலும் தருவாய்!

எடுப்பு

வரமா கிலும் தரு வாய்! - இறைவா, எந்த
வரமும் தரமனம் வல்லையென் ருலும், இந்த (வர)

தொடுப்பு

இருவினை யால் கருக் குழியடைத் தொருபுழு
உருவ ளித் தாலும், நின் திருவடி மறவா (வர)

முடிப்பு

கல்லால் அடித்தவர், வில்லால் புடைத்தவர்
காலால் உதைத்தவர், கோலால் உதைத்தவர்
எல்லார்க் கும்உள்ளம் இரங்கி யருளிய
எந்தையே ஏழையுன் சிந்தனை மறவா [வர]

பரமஹம்ஸதாசன்

---

ஆத்ம ஜோதி ஆயுள்சந்தா ஆதரவாளர்

திரு. S. வல்லிபுரம் அவர்கள் வழக்கறிஞர், பம்பலப்பிட்டி

---

குணமிகுந்த ஆயுர்வேத
மருந்துகளும்
பற்பொடியும்
எண்ணெயும்
ரிஷிகேஸ் சுவாமி சிவானந்தர் ஆச்சிரமத்தில்
தயாரிக்கப்பட்டவை
ஆத்மஜோதி நிலையத்தில்
விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

Regd, at the G. P. O. as a News Paper H. G 59-300

## சந்தா நேயர்களுக்கு

நேயர்கள் கடிதம் எழுதும் போதும் சந்தா அனுப்பும்போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் தங்கள் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட வேண்டுகிறோம். ஆத்மஜோதி அனுப்பும் போது உங்கள் சந்தா இலக்கமும் விலாசத்தின் முன்னால் குறிப்பிடப்படுகிறது. அதனைக் குறித்து வைத்துக்கொள்ளவும்.

## திருமந்திர விளக்கம்.

தமிழ்ப் பேரறிஞரும் சைவப்பெரியாருமாகிய காலஞ்சென்ற திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் வேண்டுகோட்கிணங்கி யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் பத்தாவது சைவத் திருமுறையாகப் போற்றப்படும் திருமந்திரமென்னும் அறிவுக் கடலுள் ஆழ்ந்து பல ஒப்பற்ற முத்துக்களைத் தெரிந்தெடுத்து அவற்றிற்குத் தமது சொந்த அநுபவத்தின் துணைகொண்டு விரிவுரை தந்தனர். அத்திருமந்திரக் கட்டுரைகள் நூல் வடிவுபெற்று விக்கிரம ஆண்டு ஆவணி மாசத்தில் முதலாவது பதிப்பாக வெளிவந்தன, முதற்பதிப்புப் பிரதிகள் மூன்று மாசத்துள் விற்பனையாகிவிடவே தமிழ் நாட்டில் பலர் நூல் கிடைக்காமையினால் வருந்தினர். இரண்டாம் பதிப்பைச் சுத்தானந்தப் பதிப்பகத்தார் நல்லமுறையில் பதிப்பித்து அன்பர்களின் குறையை நிவிர்த்தி செய்துள்ளார்கள்.

விலை: ரூபாய் இரண்டரை தபாற்செலவு தனி

வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவு உண்டு.

## நமது சமய விளக்கம்.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியது.

சிறுவர் முதல் பெரியோர்கள் ஈறாக யாவரும் படித்துப் பயனடையக்கூடியதொரு நூல்.

விலை: சதம் 25. (அணா 4.)

விலாசம்:

"ஆத்மஜோதி" நிலையம்,

நாவலப்பிட்டி. (சிலோன்).

சரவண அச்சகம், நாவலப்பிட்டி